திரு. பெ. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அரசினுடைய ஆலோசனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இன்றையதினம்1923-க்கும் 1990-க்கும்எத்தனையோ ஆண்டுகள், எத்தனையோ முறை, சமுதாயத்தில் எத்தனையோ வகையில் வளர்ந்திருக்கின்றன. இந்தக் காலக் கட்டத்திற்கு ஏற்ற வகையில் ஒரு புதிய சட்டத்தை உருவாக்க நம்முடைய அரசு முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

10–15 மணி

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய சட்டம் உருவாக்கி அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நன்மைகள் அத்தனையுமே இந்த 1923ஆம் ஆண்டு சட்டத்தின் கீழே கிடைக்க இருப்பதால் அந்தச் சட்டமே போதும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராம. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்டண்டு நடிகர்கள், லைட்மேன்கள் உதாரணமாக சென்ற ஆண்டு திப்பு சுல்தான் படப்பிடிப்பின் போது பல பேர் உயிர் இழந்தார்கள், அவர்களுக்கு உதவித் தொகையை உடனடியாக வழங்குவதற்கு ஏதேனும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ''திப்பு சுல்தான்'', அது வேறு மாநிலத்தில் நடந்த படப்பிடிப்பு.

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது கர்நாடக மாநிலத்தில் நடந்ததாகத் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. நாராயணன் அவர்கள் அங்கேயே போய் கேட்டு தெரிந்துக் கொண்டு வர வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

வானொலியில் சட்டமன்ற நிகழ்ச்சிகள்.

*8338. திரு ஆ. அறிவழகன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாபரா :

(அ) அகில இந்திய வானொலியில், தமிழக சட்ட மன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய விமரிசனம் 10 நிமிட நேரம் மட்டுமே ஒலிபரப்பப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதை 15 நிமிடமாக உயர்த்த வேண்டுமென்று மைய அரசிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதா?

1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அகில இந்திய வானொலியில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிய ஒலிபரப்பை அதிகப்படுத்துமாறு மைய அரசைக் கோரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வானொலியில் தற்போது ஒதுக்கப்படும் 10 நிமிட நேரத்தை அவையில் நடைபெறும் பரபரப்பான நிகழ்ச்சிகள், காரசாரமான நிகழ்ச்சிகள் தகராறுகளுக்கு பெரும்பாலான நேரத்தை ஒதுக்கிவிடுகிறார்கள். இதனால் அமைதியாக, ஆரவாரம் இன்றி எடுத்து வைக்கப்படுகின்ற கருத்துக்கள் வானொலியில் விமர்சனம் செய்யப்படுவது இல்லை. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு 10 நிமிடமாக இருப்பதை 15 நிமிடமாக அதிகரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்றம் திருந்த வேண்டும் என்கிறாரா அல்லது வானொலி நிலையம் திருந்த வேண்டும் என்கிறாரா? இரண்டில் எதைச் சொல்கிறார் என்று புரியவில்லை. (சிரிப்பு).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு .ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை தொலைக் காட்சியில் காட்டவேண்டும் என்ற கருத்தில் பரவி அதற்கு ஏற்ற வகையில் செயல் வடிவம் கொடுத்து வருகிறார்கள். இந்த சூழ்நிலையில் நம்முடைய பேரவை நிகழ்ச்சிகள் 10 நிமிட நேரம் என்று இருப்பதை, 5 நிமிட நேரம் கூட்டி, அதிகரிக்க மத்திய அரசை இந்த மாநில அரசு வறுபுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வி இதே சட்டமன்றத்தில் கேட்கப்பட்டு இதற்கு முன்னால் இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள். சென்னை வானொலி நிலையத்தில் காலை 6–45 மணியிலிருந்து 6–55 மணி வரையிலும், மாலை 6–30 மணியிலிருந்து 6–40 மணி வரையிலும், அதே போல் திருச்சி வானொலி நிலையத்தில் மதியம் 2–10 மணியிலிருந்து 2–15 மணி வரையிலும், டெல்லியிலிருந்து

ஒலிபரப்பப்படும் செய்தி காலை 7–15 மணியிலிருந்து 7–25 மணி வரையிலும், மதியம் 12-40 மணியிலிருந்து 12–50 மணி வரையிலும், மாலை 7–15 மணியிலிருந்து 7–25 மணி வரையிலும் இப்படி பல்வேறு நிகழ்ச்சிகளில் நமது செய்திகளை ஒலிபரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் சட்டப் பேரவையில் அந்த வானொலி நிலையத்தினுடைய நிருபர் இங்கே வருகை தந்து இங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் ஒவ்வொரு செய்தியின் போதும் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அதனால் இந்த 10 நிமிடமே போதும் என்று அரசு கருதுகிறது.

கால்நடை மருத்துவ நிலையங்கள்

* 4992 திரு கே. ரவி அருணன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைக்க ஊராட்சி ஒன்றியங்களில் பங்குத்தொகை கோராமல் முழுத் தொகையையும் மானியமாக அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) பங்குத் தொகை கொடுத்தால்தான் கட்டிடங்கள் கட்ட முடியும் என்றிருப்பதால் உபரி நிதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்த முடியவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) பங்குத் தொகை அளிக்க இயலாத ஊராட்சி ஒன்றியங்களில் புதிய கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் கட்ட மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், தாட்கோ மற்றும் சிறப்பு மத்திய உதவித் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் அரசு நிதி உதவி அளித்து புதிய கால்நடை மருந்தகங்கள் துவக்கலாம்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் அந்த துறையின் மூலம் அனைத்து ஊராட்சி பகுதிகளிலும் கட்ட இயலாது. ஆகவே, கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் பங்குத் தொகை கட்டாமல் கட்டிடங்கள் கட்டும் திட்டத்தை அரசு மறு பரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.